# வெற்றிடங்கள்

## கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

# ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டம் (IWWRMP)

## சுற்றுச்சூழல் நிபுணர் (PS3)

### நிதி மூலம்: உலக வங்கி

ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டமானது (IWWRMP) கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் உலக வங்கி நிதியளிக்கப்பட்ட ஒன்று என்பதோடு 2026 ஒக்டோபர் 31 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பில், திட்ட முகாமைத்துவப் பிரிவில் சுற்றுச்சூழல் நிபுணர் (PS3 தரம்) பதவிக்காக இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன. 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள (MSD) சுற்றுநிருபம் மற்றும் அரச ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு அமைய இந்தப் பதவி முழு நேர ஒப்பந்த அடிப்படையிலானது.

**தேவையான தகைமைகள் மற்றும் அனுபவம்;**

**கீழுள்ள I அல்லது II அல்லது III**

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் இளமாணி பட்டம் ஒன்றை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் அல்லது தொடர்புடைய துறையில் பட்டத்திற்கு நிகரான தகைமை ஒன்றாக UGC மூலம் அங்கீகரிக்கப்பட்ட தகைமை ஒன்று அல்லது தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றில் இருந்து இணை அங்கத்துவம் / இதனையொத்த தொழில்முறை தகைமை ஒன்று அத்துடன் முகாமைத்துவ தரம் ஒன்றில் குறைந்தது 10 ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவம்.

II பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் இளமாணி பட்டம் ஒன்றை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் அல்லது தொடர்புடைய துறையில் பட்டத்திற்கு நிகரான தகைமை ஒன்றாக UGC மூலம் அங்கீகரிக்கப்பட்ட தகைமை ஒன்று அல்லது தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றில் இருந்து இணை அங்கத்துவம் / இதனையொத்த தொழில்முறை தகைமை ஒன்று மற்றும் தொடர்புடைய துறையில் பட்டப்பின்படிப்பு பட்டம் அல்லது கூட்டு நிறுவனம்/ பட்டய அங்கத்துவம் அல்லது தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட இதனையொத்த தொழில்முறை தகைமை அத்துடன் முகாமைத்துவ தரத்தில் குறைந்தது 08 ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவம்.

III தொடர்புடைய துறையில் அகில இலங்கை அரச சேவை அல்லது அதனையொத்த அந்தஸ்து ஒன்றில் வகுப்பு I அதிகாரி அத்துடன் குறைந்தது 03 ஆண்டுகள் வகுப்பு I பதவியில் அனுபவம்.

குறிப்பு : உலக வங்கி அல்லது மற்ற வெளிநாட்டு நிதி அளிக்கப்பட்ட திட்டங்களில் குறிப்பாக பெறுகை, சுற்றுச்சூழல் மற்றும் சமூக துறைகளில் குறைந்தது 03 ஆண்டுகள் அனுபவம் அவசியமாகும்.

**ஊதியம்**

- சம்பள அளவு (PS 3 பிரிவு): ரூபா 140,000.00 – 155,000.00 (01/2019 ஆம் இலக்க MSD சுற்றுநிருபத்தின்படி)

**பொது நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரர்கள் 62 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. சம்பளம் 2019/03/15 ஆம் திகதிய மற்றும் ஏதேனும் அடுத்தடுத்த திருத்தங்களின் 01/2019 ஆம் இலக்க MSD சுற்றுநிருபத்தின்படி அரசாங்கம் அங்கீகரித்த சம்பள அளவுகள் மற்றும் கொடுப்பனவுகள் அடிப்படையிலாகும்.
3. ஆரம்பத்தில் ஓர் ஆண்டு ஒப்பந்தம் அமைவதோடு, செயல்திறன் மற்றும் திட்டத்தின் தேவைகள் அடிப்படையில் வருடாந்தம் புதுப்பிக்கத்தக்கது.
4. தேர்வு செய்யப்பட்ட அபேட்சகர் தொடர்புடைய அரச அமைப்புகள் மற்றும் மற்ற நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து பணியாற்றுதல் வேண்டும்.
5. இலங்கை உலக வங்கி அல்லது வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட திட்டங்களில் உள்ள அனுபவம் அவசியமாகும்.
6. ஆங்கிலத்தில் தேர்ச்சி, அரச ஒழுங்குமுறைகளுடனான பரீட்சயம் மற்றும் கணினி அறிவு இந்தப் பதவிக்கான கட்டாய முன் தேவைகளாகும்.
7. தேவைப்படும்போதும் அதிக மணி நேரங்கள் மற்றும் வார இறுதி நாட்களில் பணியாற்ற முன்வருதல் வேண்டும்.
8. தமது தொழில் வாழ்வில் நன்னடத்தை மற்றும் மேலதிகாரிகளுடன் தொழில்முறை உறவுகளின் நிரூபிக்கப்பட்ட பதிவு.
9. இளம், சுறுசுறுப்பான மற்றும் ஊக்கமுடைய அபேட்சகர்கள் வரவேற்கப்படுகின்றனர்.

விரிவான சுயவிபரக் கோவை, இரு உறவினர் அல்லாத நடுவர்களின் தொடர்பு விபரம் மற்றும் கல்வி மற்றும் தொழில்முறை சான்றிதழ்களின் உறுதி செய்யப்பட்ட பிரதிகளுடன் சேர்த்து விண்ணப்பங்களை 2025 ஒகஸ்ட் 14 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ் தரப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

உள்ளூர் அதிகாரசபைகள், அரச கூட்டுத்தாபனங்கள், சட்டரீதியான சபைகள் அல்லது முழுமையான அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் உட்பட அரச சேவை/ மாகாண அரச சேவையில் தற்போதுள்ள விண்ணப்பதாரர்கள் தமது குறித்த நிறுவனத்தின் தலைவர் மூலம் தமது விண்ணங்களை அனுப்புதல் வேண்டும்.
தவிர, அபேட்சகர்கள் அதே விண்ணப்பத்தின் பிரதி ஒன்றை **ao.iwwrmp@gmail.com** என்ற முகவரிக்கு மின்னஞ்சலின் Subject பகுதியில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிட்டு மின்னஞ்சல் செய்வதற்கு கோரப்படுகின்றனர்.
தேர்வு நேர்முகப்பரீட்சை அடிப்படையில் அமைவதோடு தேர்வு செய்யப்பட்ட அபேட்சகர்கள் மாத்திரமே நேர்முகப்பரீட்சை ஒன்றுக்கு அழைக்கப்படுவர். எந்த ஒரு வகையிலான ஆதரவு திரட்டலும் தகுதி இழப்பாக கருதப்படுவதோடு அவ்வாறான அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**திட்டப் பணிப்பாளர்**
**ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டம் (IWWRMP)**
**2ஆவது மாடி, மகாவலி நிலையம்**
**இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை**
**கொழும்பு 07.**
**தொ.: 011 2691163**
**இணையதளம்: www.iwwrmp.lk**